
# மாலை தீப்பொறி

MALAE THEEPORI



2023 அக்டோபர் 1-15 தொகுதி 22 இதழ் 5 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்

## 9வது தேசிய மாநாடு - டெல்லி






## வாச்சாத்தி வழக்கில் உயர்நீதிமன்ற தீர்ப்பை, சிபிஐஎம்எல் கட்சி வரவேற்கிறது!

தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி மலை கிராமத்தில் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் மீது, கடந்த 1992ல் நிகழ்த்தப்பட்ட வன்கொடுமை வழக்கில் தர்மபுரி அமர்வு நீதிமன்றம் வனத்துறை, காவல்துறை மற்றும் வருவாய் துறை ஆகியவற்றைச் சேர்ந்த 215 குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனைகளை வழங்கியது. அதன் மீது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் செய்த மேல்முறையீட்டு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப்படுத்தி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. இதை சிபிஐஎம்எல் கட்சி வரவேற்கிறது.

கடந்த 30 ஆண்டுகளாக வாச்சாத்தி பழங்குடியினருக்கு நீதி பெற்றுத்தர விடாப்பிடியாக பாடுபட்ட தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம், சிபிஐ(எம்) கட்சி தலைவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் அனைவரையும் சிபிஐஎம்எல் கட்சி பாராட்டுகிறது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் அவர்கள் தனது தீர்ப்பில், உண்மையான குற்றவாளிகளை பாதுகாப்பதற்காக, அப்பாவி பழங்குடி மக்களை பலிகடாக்களாக்கிய, "அப்போதைய தர்மபுரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வனத்துறை அதிகாரி ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்பதையும் வலியுறுத்தியுள்ளார். அதனடிப்படையில், அப்போது பொறுப்பில் இருந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, தமிழ்நாடு அரசு உரிய சட்டபூர்வமான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; அதன்வழியாக வாச்சாத்தியில் பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்கான நீதியை முழுமைப்படுத்தப்பட வேண்டும் என சிபிஐஎம்எல் கட்சி கோருகிறது.

**மாநிலக் குழு,**
**இகக(மாலெ) விடுதலை**
**தமிழ்நாடு**

## தோழர் எஸ்.வி.ஆர் அவர்களுக்கு நன்றி!

கி.ரா. விருது பெற்ற தோழர் எஸ்.வி.ராஜதுரை அவர்கள், தனது விருது தொகையில் ஒரு லட்ச ரூபாயை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) கட்சிக்கு நன்கொடையாகத் தந்துள்ளார்கள். ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையை கட்சியின் கோவை மாவட்டச் செயலாளர் தோழர் கே. பாலசுப்பிரமணியனிடம் வழங்கினார். தோழர் எஸ்.வி.ஆர் அவர்களுக்கு நன்றி.



2023 அக்டோபர் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 5

## உள்ளே

| | |
|---|---|
| பொதுச் செயலாளர் பேட்டி | 4 |
| விவாதத்தைத் தடம் மாற்றி | 6 |
| ஸீரோ பெர்சன்டைல் | 9 |
| சமூகநீதி மாநாடு | 11 |
| கட்சி பொதுத் திட்டம் | 13 |
| நில மீட்பு போராட்டங்கள் | 14 |

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

நிர்வாக அலுவலகம்

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# சமூகநீதி சரிந்து போனால்?!

*சாதியாதிக்கம், சாதியப்படிநிலை, குலக் கல்வி, குலத் தொழில் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் பேசியதை வைத்துக் கொண்டு, சனாதனத்தை எதிர்ப்பவர்கள் இந்துக்களுக்கு எதிரி, அந்த வகையில் 'இந்தியா' கூட்டணி இந்துக்களுக்கு எதிரி என்று பிரச்சாரத்தைத் திட்டமிட்டு நாடு முழுவதும் பாஜக-சங்கிகள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாட்டில், சமூகநீதி நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள், வனத் துறை அதிகாரிகள் ஆகியவர்களுக்கான கூட்டத்தை துவக்கி வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசும்போது, பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் நடவடிக்கை எடுப்பதில் துளியும் சமரசம் கூடாது என்றும் பட்டியலின, பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்து மக்கள் அச்சமின்றி தகவல் தெரிவிக்க பிரத்யேக வாட்ஸ்ஆப், தொலைபேசி எண்ணை மாவட்ட ஆட்சியர்கள் அறிவிக்க வேண்டும் என்றும் பேசியுள்ளார். மேலும், தூத்துகுடி விஏஓ லூர்து பிரான்சிஸ், திருச்சி சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதன் கொலை வழக்குகளில் போலீஸார் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித் தந்ததைப் பாராட்டியுள்ளார். ஆனால், அக்டோபர் 2, காந்தி பிறந்த நாள் அன்று நாகர்கோயில் கிருஷ்ணன்கோயில் அருந்ததியர் காலனி மக்கள், 50 ஆண்டுகளாகக் குடியிருக்கும் தங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று கோரி கருப்புக் கொடி ஏந்தி அமைதியாகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது, நாகர்கோயில் காவல்துறையினர், கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது மட்டுமின்றி, மலம் அள்ளும் நீங்கெல்லாம் போராட்டம் நடத்துறீங்க என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி, பெண்களை மானபங்கப்படுத்தியுள்ளார்கள். போராட்டத்திற்குத் தலைமையேற்ற திராவிட தமிழர் கட்சி மாநில மட்ட தலைவர்களை பஸ் கண்ணாடியை உடைத்ததாக வழக்குப் போட்டு சிறையில் அடைத்துள்ளார்கள். அக்டோபர் 3 அன்று, திருநெல்வேலி திருப்பணி கரிசல் குளத்தைச் சேர்ந்த 19 வயது பட்டியலினப் பெண் சந்தியாவை, 18 வயது பூர்த்தி அடையாத இளைஞர் பட்டப் பகலில், நெல்லை டவுன் காவல் நிலையத்தில் இருந்து அரை கி.மீ. தூரத்தில் உள்ள குடோனில் வைத்து, தன்னை காதலிக்க மறுத்ததால் கொலை செய்துள்ளார். தென் மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் பட்டியலின மக்கள் கொடூரமாகத் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் அதிகரித்துக் கொண்டு இருக்கின்றன. புளியங்குடி தங்கசாமி, திசையன்விளை முத்தையா, நான்குநேரி சின்னதுரை, கரிசல்குளம் சந்தியா என்று பட்டியல் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. வேங்கை வயலில் குடிநீர் தொட்டிக்குள் மலத்தைக் கலந்த கயவர்கள் இன்னும் கைது செய்யப்படாத நிலையில், மலம் அள்ளும் உங்களுக்குப் போராட்டமா? என்று நாகர்கோயிலில் காவல்துறைக்குள்ளிருந்தே குரல் வருகிறதென்றால், தமிழகத்தின் சமூகநீதி கேள்விக்குள்ளாகாதா? தூத்துக்குடி விஏஓ லூர்து பிரான்சிஸ் கொலையில், அம்புகள் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளன. எய்தவர்கள் தப்பிவிட்டனர். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்குள் 17 கொலைகள் நடந்துள்ளன. இதில் பெரும் பாலானவர்கள் பட்டியலினத்தவர்கள். பல கொலைகளில் நன்கு தெரிந்தும் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இன்னும் பல கொலைகளில் கொலைக்குக் காரணமானவர்கள் கைது செய்யப் படவில்லை. இந்த நிலையில், பட்டியலின மக்களுக்காக புகார் அளிக்க தனி வாட்ஸ் ஆப் மற்றும் தொலை பேசி எண்கள் உருவாக்குவது மட்டும் போதுமானதாகுமா?. ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் மத்தியில் இருக்கும் சாதியாதிக்க வெறி களையப்பட காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அண்ணாதுரை அவர்களை அண்ணாமலை அவதூறாகப் பேசினார் என்று திடீர் உணர்ச்சி வந்து பாஜக–அதிமுக கூட்டணி உடைந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டில் பாஜக எதிர்ப்பு வாக்குகள், மொத்தமாக திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி பக்கம் செல்லாமல் பார்த்துக் கொள்வதற்கான தந்திரமாகக் கூட இருக்கலாம். இப்படிப்பட்ட நிலையில், பட்டியலின பழங்குடி மக்களுக்கு உண்மையான சமூகநீதி, வாழ்வாதாரம் கிடைக்காமல் போனால், சனாதனத்தை ஒழிப்பது சங்கடத்திற்குள்ளாகும்.*

# ஏழைகள் ஜனநாயகத்தைப் பற்றி புரிந்து கொள்ள மாட்டார்கள் என பாஜக நினைக்கிறது!

**ரெட்டிஃப் டாட் காம் (rediff.com) இணைய இதழுக்கு இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அளித்த பேட்டியின் இரண்டாம் பகுதி – தமிழாக்கம் தேசிகன்**

இகக(மாலெ) பொதுச்செயலாளர் திபங்கரின் அரசியல் ஈடுபாடு, கொல்கத்தாவின் பிரசித்திப் பெற்ற இந்திய புள்ளியியல் கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பு பயின்றபோது துவங்கியது. மும்பையில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணியின் கூட்டத்தின்போது ஜோதி புன்யானியுடன் நடைபெற்ற உரையாடலின் போது, 'புல்டோசரை எதிர்க்க வேண்டும் என்றால் நீங்கள் அதோடு மோதித்தான் ஆகவேண்டும்' என்றார்.

**பாஜகவை விவரிக்கும்போது 'பாசிஸ்ட்' என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. நீங்களும் கூட அதைப் பயன்படுத்துகிறீர்கள். ஆனால், இந்தக் கருத்தாக்கத்தை மக்களிடம் எப்படி எடுத்துச் செல்வீர்கள்?**

*நீங்கள் அந்த வார்த்தையை பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. ஹிட்லரிஸம், தானாயிஸம் என்பதைப்போல் இப்போது மோடியிஸத்தையும் மக்கள் அறிவார்கள்.*

*அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்படுவதற்கு எதிராக நாங்கள் மக்களிடம் இயக்கத்தை எடுத்துச் செல்வோம். குடியுரிமை திருத்தச் சட்டம்(CAA), தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீடு (EWS) ஆகியவற்றால் ஏற்கனவே அரசியல் அமைப்புச் சட்டம் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது இந்திய தண்டனைச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலமும் சேதப்படுத்தப்படுகிறது.*

*சிஏஏ, என்ஆர்சி எதிர்ப்பு இயக்கத்தின் போது அஸ்ஸாம் என்ஆர்சியில் இறுதி பட்டியலில் இடம் பெற முடியாத பெரும்பான்மையானவர்கள் ஏழைகள் என்று நாங்கள் மக்களிடம் சொன்னோம். ஏனென்றால், ஏழைகள்தான் நிலமோ அல்லது ஆவணங்களோ வைத்திருக்க மாட்டார்கள்.*



*பீகாரில் பல இடங்களில் நாங்கள் ஷாகின்பாக்குகளை நடத்தினோம். மற்ற இடங்களைப் போல் அல்லாமல் இதில் 70% இந்து பெண்களும் 30% முஸ்லிம் பெண்களும் கலந்து கொண்டனர். முஸ்லிம் பெண்களை அணி திரட்டுவதில் என்ன இருக்கிறது? அவர்கள் எப்படியாகிலும் போராட தயாராக இருப்பார்கள். எங்களுடைய வேலை முஸ்லிம் அல்லாதவர்களை அணிதிரட்டுவதுதான்.*

*30,000 பேரைக் கொண்டு வலுவான சட்டமன்றம் நோக்கிய பேரணியை நடத்தினோம். சிஏஏ, என்ஆர்சிக்கு எதிராக ஏக மனதாக சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்ற வைத்தோம். இது தேஜகூ ஆட்சியில் இருக்கும் மாநிலத்தில் முதன் முதலில் நிறைவேற்றிய தீர்மானமாகும். முதலமைச்சர் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா*

தளம், அப்போது பாஜகவுடன் கூட்டணி வைத்து ஆட்சி செய்தது. பேரணியில் கலந்து கொண்டவர்களில் 80% பேர் இந்துக்கள்.

நாங்கள் என்ன சொல்கிறோம் என்பதை மக்கள் புரிந்து கொள்கிறார்கள். புதிய நாடாளு மன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்ட போது, அது மன்னராட்சியின் சின்னம் என்று மக்களிடம் விவரித்துச் சொன்னோம்.

என் வீட்டு முற்றத்தில் உனக்கென்ன வேலை? என்ற பிரபலமான பாடலை, ஜனநாயகத்தில் செங்கோலுக்கென்ன வேலை என்று மாற்றிப் பாடுவோம்.

**எதிர்க்கட்சிகள் வெறுமனே பாஜகவுக்கு எதிர்வினை மட்டுமே ஆற்றுகிறார்கள். நீங்கள் உங்களுடைய சொந்த நிகழ்ச்சிநிரலை அமைக்க முடியுமா?**

தேசிய அளவிலான ஒரு விவரணை நமக்குத் தேவை. ஜனநாயகத்தை காப்பாற்றுவது இன்று மிக முக்கியமான அவசியமான விசயம். ஜனநாயகத்தை காப்பது நமது நோக்கம் என்பதற்காக மட்டும் நாம் இதை சொல்லவில்லை, ஜனநாயகத்தை காப்பாற்றுவது ஏழை மக்களுக்கு மிகவும் அவசியமானதாகும். ஏழைகள் ஜனநாயகத்தைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று பாஜக நினைக்கிறது. ஆனால், ஏழைகளுக்கு நிலம், கூலி எவ்வளவு முக்கியமோ அதேபோல் சுயமரியாதையும் முக்கியம் என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

எங்களுடைய சொந்த அனுபவமே இந்த விவரணையை வளர்க்க உதவும்.

•நாம் சுதந்திரப் போராட்ட இயக்க மரபை கொண்டிருக்கிறோம். இப்போது நிலவும் சூழ்நிலையை விளங்கிக் கொள்ள, வெள்ளை நிற எஜமானர்கள் இருந்த இடத்தில் பழுப்பு நிற எஜமானர்கள் மாற்றப்படுவார்கள் என்று பகத்சிங் கணித்ததை நாம் பயன்படுத்த வேண்டும்.

•நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் நம்முடைய அனுபவங்கள். ஜமீன்தாரி முறையை ஒழிப்பதன் மூலம் நிலப்பிரபுத்துவம் முடிவுக்கு வந்து விடாது. நிலப்பிரபுத்துவத்தின் முடிவு என்று சொன்னால், அது அவமானப்படுத்தப்படுதல் மற்றும் சாதிய வன்கொடுமையின் முடிவைக் குறிப்பதாக இருக்க வேண்டும். உயர்ந்த ஜாதியை சேர்ந்தவராக சொல்லப்படும் ஒருவர் ஆதிவாசி ஒருவரின் முகத்தின் மீது சிறுநீர் கழிக்கிற சூழலில், நிலப்பரப்புத்துவம் எப்படி பாஜகவின் கீழ் திரும்பி வருகிறது என்பதை நாம் விவரித்து சொல்ல வேண்டும்.

• சமூக நீதிக்கான போராட்டம். பாஜக, இந்தக் கருத்தாக்கத்தை சமூக பொறியியல் என்று மாற்றியுள்ளது. பிரதம மந்திரி தனது சுதந்திர தின உரையில் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு விஸ்வகர்ம யோஜனா திட்டத்தை அறிவித்திருக்கிறார். ஆனால், உள்ளார்ந்த வகையில் நீதியற்ற சமூகத்தில், நாம் நீதியை இறைந்து பெறும் ஒன்றாக ஏற்றுக் கொள்ள முடியாது.

• முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் நமது அனுபவம். இந்தியாவில் தொழிலாளி வர்க்கம் இயல்பாகவே வரம்புக்குட்பட்ட நிலையிலேயே இருக்கிறது என்ற கருத்தியல் பொதுவானதாக இருக்கிறது. வளர்ந்து வரும் நகர்மயம், ஜிக் தொழிலாளர்கள் என்று பார்க்கும்போது அந்தக் கருத்தியல் இனியும் நிலை பெறக்கூடியது அல்ல. நகர்மயத்தைத் தொடர்ந்து அடுத்து சுற்றுச்சூழல் பிரச்சனை வந்துவிடும். இப்போது சுற்றுச்சூழல்தான் மேலதிக மைய நீரோட்ட பிரச்சனையாக உள்ளது.

இவை எல்லாமே இதற்கு முன்னர் மக்களின் தனித்தனி எதிரிகளாக இருந்தன. இப்போது அவையெல்லாம் ஒன்றாகிவிட்டது. அந்த ஒன்றுதான் மோடி. அதுதான் பாசிசம். இந்தத் தனித்தனி போராட்டங்களில் நாம் செலவழிக்க வேண்டிய சக்தியை ஒன்று திரட்டிக் கொள்ள வேண்டும்.

நாம் தெருவில் இறங்கிப் போராடவும் தயாராக இருக்க வேண்டும். புல்டோசரை எதிர்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அதை எதிர்த்து நின்றாக வேண்டும்.

**இந்தியா கூட்டணிக்குள் இந்த நிகழ்ச்சி நிரலை நீங்கள் எப்படி எடுத்துச் செல்வீர்கள்?**

அது கேள்விதான். ஆனால், இந்தியா கூட்டணிக்கு வெளியே நாங்கள் சுதந்திரமாக செயல்படுவோம். மகாராஷ்டிரா, பீகார், பஞ்சாப் மாநிலங்களில் ஏற்கனவே துவக்கம் நிகழ்ந்துள்ளதாக நான் நினைக்கிறேன். அங்கெல்லாம் தேஜகூவில் பிளவு ஏற்பட்டுள்ளது.

பஞ்சாபில் விவசாயிகள் இயக்கத்தின் விளைவாக அகாலி தளம் பாஜகவை விட்டு விலகியது. பாஜகவின் மத்தியத்துவப்படுத்தப்பட்ட அதிகார குவிப்புக்கான ஆசையின் காரணமாக மகாராஷ்டிராவிலும் பீகாரிலும் பிளவு ஏற்பட்டது.

சந்தேகப்பட்டவர்களின் எண்ணம் தவறு என்று நிரூபிக்கும் வண்ணம் இன்னொரு பக்கம் இந்தியா கூட்டணி வளர்ந்து கொண்டே வருகிறது. காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சி ஒருபோதும் சேராது என்றார்கள். ஆனால், அவர்கள் சேர்ந்தார்கள். சரத் பவாரிடமிருந்து அஜித் பவார் விலகியதால் சரத் பவார் கூட்டணியிலிருந்து வெளியேறி விடுவார் என்றார்கள் இன்னும் அவர் கூட்டணிலேயேதான் இருக்கிறார்.

ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய சொந்த பிரச்சனைகளின் அடிப்படையிலான போராட்டங்களை தொடர்கிறார்கள். அவரவர்களின் அடிப்படையாக பாஜக எதிர்ப்பு நிலைப்பாட்டில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிற வரை எல்லாம் நல்லது தான்.

## விவாதத்தை தடம்மாற்றி மக்களை பிளவுபடுத்தத் துடிக்கும் சங்கிப் படையின் முயற்சிகளை முறியடிப்போம்.

பரந்த அடிப்படையிலான ஒன்றுபட்ட எதிரணி ஒன்று உருவாகியதிலிருந்து, மோடி அரசாங்கமும் ஒட்டுமொத்த சங்கி–பாஜக படையணியும் கலக்கமடைந்துள்ளனர் என நன்றாகவே புலப்படுகிறது. புல்வாமா படுகொலையால் தூண்டிவிடப்பட்ட மிகை தேசியவாத அலையின் பின்னணியில், 2019இல் நடைபெற்ற தேர்தலில் கூட, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைந்த வாக்குகள் 45%ஐத் தாண்டவில்லை என்பதும், பாஜகவின் சொந்த வாக்குகள் 40%க்கும் குறைவாகவே இருந்தது என்பதும் அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும். அன்றிலிருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மூன்று முக்கிய கட்சிகளான பஞ்சாபின் அகாலி தளம், மகாராஷ்டிராவின் சிவசேனா, பீகாரின் ஐக்கிய ஜனதாதளம் ஆகியவை பாஜகவிடம் இருந்து பிரிந்துவிட்டன. அதே நேரத்தில் கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் மிகத் தெளிவாக அம்பலமானது போன்று பாஜகவின் சொந்த தேர்தல் பலம் குறைந்து கொண்டே வருகிறது. பாஜக அல்லாத பல வண்ண கட்சிகளின் பரந்த அளவிலான எவ்வகை திறன்மிகு ஒன்றிணைவும், பாஜக கவலை கொள்வதற்கு வெளிப்படையான காரணமாகவே இருக்கும்.

**சனாதனம் என்பதை இந்து மதத்திற்கு இணையான வார்த்தையாகப் பயன்படுத்தி, அது சொல்லப்பட்ட பின்னணியில் இருந்து அதனை அகற்றி, இந்துக்களை இனப்படுகொலை செய்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்பாகவும், இந்திய கலாச்சாரத்தின் மீதான தாக்குதலாகவும் பாஜக அதனைத் திரித்து முன்வைக்கிறது.**

செயல்படாத மோடி அரசாங்கத்தின் பேரழிவுமிகு ஆட்சிக்கு எதிராக பெருகிவரும் மக்களின் கோபமும், இந்த மக்களின் கோபத்திற்கும், பரிணமித்துவரும் எதிரணி ஒற்றுமைக் கட்டமைப்பின் அதிகரித்துக் கொண்டிருக்கும் இயங்காற்றலுக்கும் இடையே வளர்ந்து வரும் இசைவும் தான், தேர்தல் கணக்குகளையும் தாண்டி பாஜகவைக் கலங்க வைத்துள்ளது. இண்டியா என்று சுருக்கப்பட்ட பெயர், எதிரணியின் ஒற்றுமை செயல்முறைக்கு புத்துணர்ச்சியூட்டும் கூட்டு அடையாளத்தையும் மாறுபட்ட கதையாடலையும் வழங்கியது. மேலும் அது சோர்வடைந்துள்ள மோடி அரசாட்சி வரவிருக்கும் தேர்தல்களில் நிச்சயமான ஒரு போரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது. அப்போதிருந்து, ஒன்றுபட்ட எதிரணியை குறிவைக்கும் முயற்சிகளில் பாஜக தீவிரமடைந்துள்ளது. இண்டியாவை கிழக்கிந்திய கம்பெனியுடனும், இந்தியன் முஜாஹிதீனுடனும் தொடர்பு படுத்துவதில் இருந்து பாரதத்திற்கு எதிராக அதனை நிறுத்துவது வரை, சாத்தியமான அனைத்து கோணங்களிலும் முயற்சி செய்து வருகிறது.

திடீரென்று அறிவிக்கப்பட்ட சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தின் உண்மையான நடவடிக்கைகள், விளைவுகளுக்காக நாடு காத்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், இண்டியா கூட்டணிக்கு எதிராக கெடு நோக்குடைய பரப்புரை இயக்கத்தைத் தொடங்க சங்கி-பாஜக முகாம் இரண்டு சமீபத்திய வளர்ச்சிப்போக்குகளை குறிவைத்திருப்பதாகத் தெரிகிறது. கர்நாடகத் தேர்தல் பரப்புரையின் போது அவரது விரக்தி மிகுந்த 'ஜெய் பஜ்ரங்பலி' முழக்கத்தின் அதே வீரியத்துடன், முதல் பரப்புரை இயக்கம் நரேந்திர மோடியால் தலைமை தாங்கி நடத்தப்படுகிறது. சாதிய ஒடுக்குமுறையிலிருந்தும் பல்வேறு வகையான சமூகப் பாகுபாடுகள், அநீதிகளில் இருந்தும் மக்கள் விடுதலை பெற வேண்டுமானால் சனாதனம் ஒழிக்கப்பட வேண்டும் என்று தமிழகத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் தமிழக இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறிய கருத்துக்கு இம்முறை சங்பரிவாரம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சனாதனம் என்பதை இந்து மதத்திற்கு இணையான வார்த்தையாகப் பயன்படுத்தி, அது சொல்லப்பட்ட பின்னணியில் இருந்து அதனை அகற்றி, இந்துக்களை இனப்படுகொலை செய்வதற்கு விடுக்கப்பட்ட அழைப்பாகவும், இந்திய கலாச்சாரத்தின் மீதான தாக்குதலாகவும் பாஜக அதனைத் திரித்து முன்வைக்கிறது. குறிப்பிட்ட சில தொலைக்காட்சி அலைவரிசை நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் குழுவால் நடத்தப்படுகிற, வெறுப்பை உமிழும் மதவாத துருவச் சேர்க்கையை உருவாக்கும் விவாதங்களில் பங்கேற்பதில்லை என்ற இண்டியா கூட்டணியின் முடிவு சம்பந்தமானது இரண்டாவது பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையிலும், அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர்களைவிட, மீண்டும் பாஜக தான், இதனைக் கருத்து சுதந்திரம் மற்றும் ஊடகங்களின் மீதான தாக்குதல் எனவும், இது அவசரநிலைக்கு ஈடானது எனவும் கூறி, இந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு உடல்ரீதியான தாக்குதல்களுக்கான சாத்தியங்களை இந்தக் கூட்டணி உருவாக்குவதாகவும் குற்றம் சாட்டியது. இண்டியா கூட்டணியை இந்துக்களுக்கு எதிரானது, ஊடக சுதந்திரத்திற்கு விரோதமானது என்று சித்தரித்து ஒட்டுமொத்த சங்கி-பாஜக அமைப்பும், மோடியின் செல்ல ஊடகங்களும் இப்போது திட்டமிட்டு பரப்புரை செய்து வருகின்றனர்.

இண்டியா கூட்டணியின் தலைவர்களும் செய்தித் தொடர்பாளர்களும், குறிப்பிட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற பிரச்சினையைப் பற்றிப் பார்ப்போம். அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் சுதந்திரம் எந்த வகையிலும் இதன் மூலம் கட்டுப்படுத்தப் படவில்லை. அவர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்பது இண்டியா கூட்டணியின் முடிவு.

இது, வெறுப்பையும் பொய்களையும் பரப்புவதை முழு நேரப் பணியாக செய்து ஒவ்வொரு நாளும் சமூக சூழலைக் கெடுக்கும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் குழுவை, அரசாங்கத்திற்கு நம்பகமானப் பரப்புரை இயந்திரமாக சேவை செய்பவர்கள் என அழைப்பதற்கு ஈடானதாகும். டெல்லியின் எல்லையில் போராடிக் கொண்டிருந்த விவசாயிகளை மோடியின் செல்ல ஊடகங்கள் காலிஸ்தானி பயங்கரவாதிகளாக சித்தரித்த போது, விவசாயிகள் இயக்கம் அற்புதமாக அதனை எதிர்த்துப் போராடியது. மோடியின் அரசாட்சி, அதானி, அம்பானியின் கார்ப்பரேட் சக்தி ஆகியவற்றுக்கு அக்கம் பக்கமாக மோடியின் செல்ல ஊடகங்களையும் நேரடியான இலக்குகளில் ஒன்றாக ஆக்கியதன் மூலம் அவற்றை மதிப்பற்றதாக்கியது. நச்சுப் பரப்புரையை ஊடகவியல் என ஏற்றுக் கொள்ளாமல் மறுதலித்ததன் மூலம் இண்டியா முகாம் இதை முன்னெடுத்துச் சென்றுள்ளது.

சனாதனம் என்ற சர்ச்சையைப் பொறுத்த வரையில், இந்தியாவில் சாதிய அமைப்பு மிகவும் உறுதிமிக்க நிறுவனமயமாகியிருக்கிறது என்றால், அதை புனிதப்படுத்துவதிலும் ஏற்றுக் கொள்ளச் செய்திருப்பதிலும் மதம் பெரும் பங்கு வகித்துள்ளது என்பது ஒன்றும் யாரும் அறிந்திராத இரகசியமல்ல. சாதிய எதிர்ப்பு இயக்கம் இந்த நிறுவனமயமாக்கப்பட்ட அநீதிக்கும் சமத்துவமின்மைக்கும் எதிராகக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. பாபாசாகேப் அம்பேத்கர் மனுஸ்மிருதியை பொதுவெளியில் வெளிப்படையாக எரித்து, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்காக தனது வாழ்நாள் முழுவதும் போராடும் புனிதப் போராட்டத்தைத் தொடங்கினார். மேலும், அவர் மறைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக, தனது கடைசிப் பெரிய எதிர்ப்பு நடவடிக்

கையில், அவர் இந்து மதத்தைத் துறந்து பௌத்தத்தைத் தழுவினார். இந்த முக்கிய சாதியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மோடி அரசாங்கம் 'இந்துக்கள் ஆபத்தில் உள்ளனர்' என்ற விளையாட்டை விளையாடு வதன் மூலம் எதிர்ப்பினை ஒடுக்க முயல்கிறது.

சனாதனம் என்பதன் நேரடி அர்த்தம் காலமற்றது அல்லது நிரந்தரமானது என்பதாகும். நமது சமீபத்திய வரலாற்றில் மத, சமூக சீர்திருத்தங்களுக்கான முயற்சிகளை தடுத்து நிறுத்த இந்த வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப் படுகிறது. மோடி ஆட்சி சனாதனம் என்ற எச்சரிக்கை பொத்தானை அழுத்தும்போது, தற்செயலாக, சமூகத்தின் பெரும்பான்மை மக்களுக்கு (பகுஜன் சமாஜ்) இழைக்கப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகால அநீதியைப் போக்குவதற்கு ஆதரவான நடவடிக்கையாக அடுத்த இருநூறு ஆண்டுகளுக்கு இடஒதுக் கீட்டை ஏற்கத் தயாராக இருக்க வேண்டுமென ஆர்எஸ்எஸ் முகாமை மோகன் பகவத் கேட்டுக் கொண்டார். சங்கிப் படைப்பிரிவின் தத்துவ வாதிகள் பெரும்பாலும் முகலாயர்கள் காலத்தில் புகுத்தப்பட்டு பிரிட்டிஷ் காலனியவாதிகளால் வலுப்படுத்தப்பட்ட ஒரு 'சிதைவு' என்று சாதியை முன்வைக்கிறார்கள். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகால சாதிய ஒடுக்குமுறை பற்றி மோகன் பகவத் பேசும்போது, இந்து மதத்திற்கும் சாதியத்திற்கும் இடையே உள்ள இயற்கையான தொடர்பைக் கண்டிப்பாக மறுக்க முடியாது.

சங்கிக் குடும்பத்தினர் ஒரே நேரத்தில் பல நாக்குகளால் பேசிய வரலாறு உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகால சமூக அநீதியைப் பற்றி பகவத் பேசுகையில், சங்கிப் படை உண்மையில் வீர விழிப்புணர்வு பயணங்களை (சௌர்ய ஜாகரன் யாத்திரைகளை) நடத்தி நாடு முழுவதிலும் மூர்க்கத் தனத்தைக் கிளறி விடுவதிலும், மதக் கலப்பு மணங்களை, மதமாற்றத்தை தடுத்து, 'சனாதன தர்மத்தை'ப் பாதுகாக்க பல்லாயிரக்கணக்கான தர்மப் போராளிகளையோ அல்லது மதப் போராளி களையோ உருவாக்குவதிலும் மும்முரமாக இருக்கிறது. உதயநிதி ஸ்டாலினுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுகிறது. விலைவாசிகள், வேலைகள், வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் போன்ற அன்றாட வாழ்க்கையின் உடனடிப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியும், இந்திய அரசியல் சாசனத்தின் அடித்தளத்தையும் பன்முகப்பட்ட கலாச்சாரத்தையும் பாதுகாக்கவும் இந்திய மக்கள் உறுதியாக இருக்கும்போது, அதிலிருந்து இந்தியாவை மீண்டும் தடம் புரளச் செய்து இனப்படுகொலை வன்முறையைத் தூண்டிவிட சங்கிப் படை துடிக்கிறது. இந்த செயல் திட்டம் முறியடிக்கப் பட்டேயாக வேண்டும். ❑

எம்எல் அப்டேட் தலையங்கம் 19–25 செப். 2023

**தமிழாக்கம் – செந்தில்**

சாதிய அமைப்பு முறையை, மத வெறியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற உதயநிதி ஸ்டாலினின் அறைகூவலை வைத்துக்கொண்டு வெறித்தனத்தை கிளறிவிடும் முயற்சியை இப்போது அவர்களுடைய திட்டத்தில் புதிய அம்சமாக பார்க்க முடிகிறது. அமைச்சரவை சகாக்கள் இந்த (உதயநிதி ஸ்டாலினின்) அறிவிப்புக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என நரேந்திர மோடியே சொல்லும்போது, பாஜக பிரச்சாரகர்கள் இதை இந்துத்துவத்திற்கு எதிரான இனப்படுகொலை ஆபத்து என்று விவரிக்கின்றனர். சாதிய ஒடுக்குமுறை, பாலின அநீதி, மதத்தின் பெயரால் அமல்படுத்தப்படும் மற்றும் பாதுகாக்கப்படும் பல்வேறு பிற்போக்கு அம்சங்கள் போன்ற தீமைகளைக் குறிக்க தமிழ்நாட்டின் சமூக நீதி மற்றும் சுயமரியாதை இயக்கங்களில் பொதுவாக பயன்படுத்தப்படும் சனாதனம் என்ற வார்த்தையை உதயநிதி பயன்படுத்தி இருந்தார்.

சதி வழக்கம், சாதி மற்றும் பாலின தப்பெண்ணங்களின் மோசமான வடிவங்கள், மனுஸ்மிருதி போன்ற படைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட இழிவுகள் மற்றும் அநீதிகள் போன்ற குறிப்பான மிக பிற்போக்கான நடைமுறைகளை தடுத்து நிறுத்த இந்துத்துவத்திற்குள்ளிருந்து மத சீர்திருத்தங்களுக்காக எழுந்த குரலுக்கு எதிராக, இந்து மதம் மற்றும் வேதங்களின் கால வரம்பற்ற அல்லது சாசுவத குணாம்சத்தை அறுதியிட்டு சனாதனம் என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது. சங்படை இப்போது இந்துயிசம், இந்துத்துவா மற்றும் சனாதனம் ஆகிய சொல்லாட்சிகளை ஒன்றுக்கு பதில் இன்னொன்றாக மாற்றி மாற்றி பயன்படுத்துகிறது. சமூக நீதி, சமூக சமத்துவத்துக்கான போரை எந்த ஒரு மதத்திற்கும் எதிரான முரண்பாடாக நிலை நிறுத்த அனுமதிக்கக் கூடாது. மத வெறியை உசுப்பி விட்டு சமூக நீதி இயக்கத்தை ஒடுக்கும் திட்டத்தை முறியடித்தே ஆக வேண்டும். – அரசியல் தலைமைக்குழு சுற்றறிக்கையிலிருந்து....

# முதுநிலை மருத்துவ படிப்பில் சேர நீட் தகுதி ஸீரோ பெர்சன்டைல் : ஒன்றிய பாஜக அரசின் சமூக அநீதி

அ.சந்திரமோகன்

"முதுநிலை மருத்துவ பட்ட படிப்புக்கான மூன்றாவது கட்ட கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு '0' பெர்சைன்டைல் இருந்தால் போதும்" என்று தேசிய மருத்துவக் கழகம் அறிவித்துள்ளது. அதாவது, இந்தியாவில் முதுநிலை மருத்துவப் படிப்பில் சேருவதற்கான நீட் தகுதி மதிப்பெண்கள் பூஜ்ஜியம் பெர்சைன்டைல் ஆக குறைக்கப் பட்டிருக்கிறது.

**✸பூஜ்ஜியத்திற்கு கீழே மதிப்பெண் போனாலும் இடங்கள் :**

பெர்சண்டேஜ், பெர்சைன்டைல் (percentile) இரண்டுமே பார்க்க ஒன்று போல் இருந்தாலும், பெரிய வித்தியாசம் உண்டு. பெர்சண்டேஜ் என்பது சதவீத கணக்காகும். நூறில் எத்தனை பங்கு எனக் கணக்கிடுவதாகும். ஆனால், பெர்சண்டைல் என்பது அனைத்து மாணவர்களும் எடுத்த மதிப்பெண்களை வரிசைப்படுத்தி அதில் ஒரு இடத்தை குறிப்பதாகும். உதாரணமாக, ஒரு தேர்வில், தேர்வு சற்று கடினமாக இருந்து பெற்ற மதிப்பெண்களில், 50வது பெர்சண்டைல் 36 வருகிறது என்றால், 50% மாணவர்கள் 36க்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ளனர். 50% மாணவர்கள் 36க்கு கீழ் பெற்றுள்ளனர் என்பதாகும். நீட் தேர்வில் நெகடிவ் மதிப்பெண் உண்டு.

> மருத்துவக் கல்வியின் தரத்தை அதிகரிக்கவும் மருத்துவக் கல்வி வணிகமயமாவதை தடுக்கவும் நீட் தேர்வு எந்த வகையிலும் உதவவில்லை என்பதே உண்மை.

ஸீரோ பெர்சண்டைல் என்பது ஸீரோ மதிப்பெண் அல்ல. இருப்பதிலேயே கடைசி மதிப்பெண். அதாவது கடைசி மதிப்பெண் எதிர்மறையில் இருந்தாலும் அதுதான் ஸீரோ பெர்சண்டைல். எனவே பூஜ்யம் மதிப்பெண்ணுக்கும் கீழே போய் எதிர்மறை மதிப்பெண் எடுத்தாலும், முதுநிலை மருத்துவப் பட்ட படிப்பு இடங்கள் உறுதியாக கிடைக்கும். பூஜ்யத்திற்கு கீழேபோய் எதிர்மறை மதிப்பெண்கள் எடுத்தாலும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்குச் சேரலாம் என்றால், நீட் தேர்வு "தகுதியை" அடிப்படையாக கொண்டது இல்லை என்பது தெளிவாகிறது.

'நடப்பாண்டில் 8,000 க்கும் அதிகமான முதுநிலை மருத்துவப் படிப்பு இடங்கள் நிரப்பப்படாமல் போகும் அபாயம் உள்ளதாகவும், நிரப்ப தகுதியான மாணவர்கள் இல்லை என்பதாலும்' தகுதி மதிப்பெண்கள் குறைக்கப்பட்டதாக ஒன்றிய அரசின் தரப்பில் கூறப்படுகிறது. எனினும், காலியாக உள்ள 90 % க்கும் மேற்பட்ட சீட்டுக்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகள், தனியார் பல்கலைக் கழகங்களில் உள்ளன. அவற்றின் கொள்ளை வருமானம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டு முதுநிலை நீட் தேர்வு முடிவுகளைப் பார்த்தால், 30 பேர் ஒற்றை இலக்கத்திலும், 14 பேர் பூஜ்ஜியம் "0" மதிப்பெண்களும், 13 பேர் பூஜ்யத்திற்கும் கீழாக, எதிர்மறை நெகட்டிவ் மதிப்பெண்களும் பெற்றுள்ளனர்.

இவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு இந்த முடிவு வழிவகுக்கிறது. இத்தகைய தகுதியற்ற ஆனால் கோடிக்கணக்கில் பணம் வைத்திருப்பவர்கள் முதுநிலை மருத்துவப் படிப்பில் சேருவார்கள் என்பது தான் ஸீரோ பெர்சன்டைல் விளைவாகும்.

நீட் தேர்வு அறிவிக்கப்பட்ட போது, மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவதும், தனியார் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மருத்துவ படிப்புக்கான இடங்கள் விற்கப்படும் கொள்ளையைத் தடுப்பதும் நோக்கங்களாக வாதிடப்பட்டது. இவை அனைத்தும் மோசடி என்பது இப்போது தெட்டத் தெளிவாக அம்பலமாகிவிட்டது.

**✹ ஸீரோ பெர்சண்டைல் வேண்டாம் அரசே கலந்தாய்வு மூலம் நிரப்பிடுக!**

முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு தமிழக அரசின் மருத்துவ கல்லூரிகளில் ஆண்டு கல்விக் கட்டணம் அதிகபட்சம் ரூ.40,000 தான். ஆனால், தனியார் கல்லூரிகளில் முதுநிலை மருத்துவப் படிப்புக்கான கல்விக்கட்டணம் ரூ.40 லட்சத்துக்கும் கூடுதல் ஆகும். இந்தளவு கல்விக்கட்டணத்தை செலுத்துவது இதுவரை தகுதி பெற்ற மாணவர்களுக்கு சாத்தியமில்லை. தனியார் மருத்துவக் கல்லூரிகள் மருத்துவக் கல்விக் கட்டணத்தை குறைத்து, அந்த இடங்கள் அனைத்தையும் அரசே கலந்தாய்வு மூலம் நிரப்பினால், ஏற்கனவே தகுதி பெற்ற மாணவர்களைக் கொண்டு அனைத்து இடங்களையும் நிரப்ப முடியும்.

முதுநிலை நீட் தேர்வுக்கான விதிகளின்படி, மொத்தம் 800 மதிப்பெண் கொண்ட தேர்வில் பொதுப் பிரிவினருக்கு 291 மதிப்பெண்கள், இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு 257 மதிப்பெண்கள் தகுதி மதிப்பெண்கள் ஆகும். தேர்வு எழுதிய 2,00,517 பேரில், 1,20,000 பேர்கள் மேற்கண்ட மதிப்பெண்களை பெற்று தகுதி பெற்றுள்ளனர். இந்தியாவில் முதுநிலை மருத்துவப் படிப்பில் உள்ள மொத்த இடங்கள் 45,337 தான். அவற்றை நிரப்ப அந்த இடங்களை விட கிட்டத்தட்ட மூன்று பங்கு தகுதியுடன் இருக்கும்போது, அந்தத் தகுதி மதிப்பெண்களுக்கும் குறைவாகவும், பூஜ்யத்துக்கும் கீழே "0" பெர்சன்டைல் வாங்கியவர்கள் ஆகவும் உள்ள 80,000 பேருக்கு தகுதி இருப்பதாக அறிவிக்க வேண்டிய தேவை என்ன?

இது, கோடீசுவரர்களுக்கு மருத்துவ மேற்படிப்புகளை தாரை வார்க்கும் சமூக அநீதி ஆகும்.

**✹ நீட் திரும்பிப் பெறுக!**


நீட் தேர்வுக்கும் தகுதிக்கும் எந்த தொடர்பு மில்லை. இதன் மூலம் ஒன்றிய அரசின் 'தகுதி' மற்றும் பொது நுழைவுத் தேர்வு கொள்கை படுதோல்வி அடைந்துள்ளது. இளநிலை மருத்துவப் படிப்பில் நீட் தேர்வும் கொள்ளையடிக்கும் கோச்சிங் மையங்களும், முதுநிலை மருத்துவ படிப்பில் பூஜ்யம் பெர்சன்டைல் பெற்றவர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் கட்டணமும் என்பதுதான் இதன் செய்தியாகும். இளநிலை மருத்துவ படிப்பில் நீட் திணிப்பும், முதுநிலை மருத்துவ படிப்பிற்கு நீட் தேர்வு மதிப்பெண்கள் பூஜ்யத்திற்கு கீழே போனாலும் இடம் வழங்குவதும் மாபெரும் சமூக அநீதியாகும்.

இளநிலை மருத்துவப் படிப்பில் நீட் தேர்வு மூலம் வடிகட்டி, அடித்தட்டு ஏழை மாணவர்களின் மருத்துவக் கல்வி உரிமையை மறுத்து விட்டு, முதுநிலை படிப்பில் பணக்காரர்கள், உயர் சாதி பிரிவினர் தடையின்றி நுழைவதற்கு வழிவகுக்கும் சதிச் செயலாகவே, இது அமைந்திருக்கிறது.

மருத்துவக் கல்வியின் தரத்தை அதிகரிக்கவும், மருத்துவக் கல்வி வணிகமயமாவதை தடுக்கவும் நீட் தேர்வு எந்த வகையிலும் உதவவில்லை என்பதே உண்மை. எனவே, மருத்துவப் படிப்புக்கான அனைத்து நிலை களிலும் நீட் தேர்வை ரத்து செய்யப்பட வேண்டும்.

✹ இளநிலை மருத்துவ படிப்பில் நீட் தகுதி தேர்வு வேண்டாம்.

✹ முதுநிலை மருத்துவ படிப்பில் சேர நீட் தகுதி ஸீரோ பெர்சன்டைல் என்பதும் வேண்டாம். ❑



# நாம் அனைவரும் விடுதலைப் போராட்டத்தின் மதிப்புகளைப் போற்றி, உயர்த்திப்பிடித்து சமூக நீதிக்கான இலக்கை அடைவோம்!




**‘எல்லாமும் எல்லாருக்கும்’ என்கிற தத்துவத்தின் அடிப்படையில், திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள, சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பு 3.4.2023 அன்று முதல் மாநாட்டை நடத்தியது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது மாநாடு “ சமூக நீதிக்காக இந்தியா– சமூக நீதியின் பக்கம் மீண்டும் கவனம் குவிப்போம்” என்ற தலைப்பில் 19.9.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. அதில் காணொலி வாயிலாக இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் உரையாற்றினார்.**

*மரியாதைக்குரிய மாநாட்டு தலைவர் அவர்களே, சக பேச்சாளர்களே, சமூக நீதிக்காகப் போராடும் அனைத்து எனது நண்பர்களே!*

*இந்திய மக்கள் முன்னால் இருக்கக் கூடிய மிக முக்கியமான இந்த நிகழ்ச்சி நிரலில் நடத்தப்படும் இந்த மாநாட்டிற்கு எங்களை அழைத்ததற்காக எமது சிபிஐ எம் எல் கட்சியின் நன்றியையும் இந்த இரண்டாவது மாநாட்டிற்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இந்தியா விடுதலை அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஜனநாயகத்தில், சமூக நீதி ஒரு முக்கியான பிரதானமான அம்சமாக இருந்து கொண்டிருக்க வேண்டும். அது மக்களுக்கு உத்தரவாதப் படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக இன்று அந்த சூழல், சமூக நீதி மதிப்புகள் மற்றும் கருத் துக்களுக்கு விரோதமாக எதிராக அதிகரித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.*

*அதன் காரணமாகவே நம் எல்லாருக்கும் அது எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனநாயகத்தை, அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க பாசிசத்தின் கோரப் பிடிகளில் இருந்து இந்தியாவை விடுவிக்கவும் பரந்த அணிதிரட்டல் மற்றும் மக்கள் போராட்டங்களுடைய ஒரு மையப் பதாகையாக சமூக நீதியை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.*

*இன்று, நாம் சமூக நீதியின் மீது பல முனைத் தாக்குதல்கள் நடத்தப்படுவதைக் காண்கிறோம். முதலாவதாக, சமூக நீதியின் அடித்தளமான அரசிலமைப்புச் சட்டத்தின் மீது திட்டமிட்ட தாக்குதல் நடத்தப் படுகிறது. இரண்டாவதாக, பொருளாதாரத் தளத்தில், வளங்கள் மற்றும் மக்கள் உரிமைகளைச் சூறையாடும் கார்ப்பரேட்களின் ஆக்கிரமிப்பு ஆழப்படுவதை நாம் காண்கிறோம். 2014ல் மத்தியில் மோடி அரசு பதவி ஏற்றதில் இருந்து, கடந்த சில ஆண்டுகளாக, இடஒதுக்கீடானது*

மிகவும் குறுகிய வகையில் புரிந்து கொள்ளப் படும் நிலையிலும்கூட சமூக நீதி திட்டமிட்டு கீழ்மைப் படுத்தப்படுவது பெரிய அளவில் அதிகரித்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஒரு புறம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீடு, இது இடஒதுக்கீட்டிற்கான அரசிலமைப்புச் சட்டத்தின் நோக்கத்தையே கீழ்மைப்படுத்துகிறது. இப்போது விஸ்வகர்மா யோஜனாவின் வாயிலாக மக்களை அவர்களின் சாதி அடிப்படையிலான பாரம்பரிய குலத் தொழில்களைச் செய்ய வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது.

ஆகவே, ஒரே நேரத்தில் பல்வேறு வழிகளில் நாம் போராட வேண்டியதிருக்கும் என்பது நிச்சம். அரசியலமைப்புச் சட்ட முகவுரையானது சமூக, பொருளாதார, அரசியல் என ஒட்டுமொத்தமாக அனைவருக்குமான நீதி பற்றி பேசுகிறது. ஆதலால், சமூக நீதியைப் பலப்படுத்துவதற்கு நமக்கு பொருளாதார நீதி தேவை. நமக்கு அரசியல் நீதி தேவை. அம்பேத்கர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற ஒரு ஒருங்கிணைந்த தொகுப்பிற்கு எப்போதும் அழுத்தம் கொடுத்து வந்தார். சமூக மற்றும் பொருளாதாரத் திலும் சமத்துவம் வேண்டும்.

இன்று நாம் பொருளாதார சமத்துவமின்மை, சமூக சமத்துமின்மை வளர்ந்து கொண்டிருப் பதையும் நம்முடைய குடிமை சுதந்திரங்கள் மற்றும் குடிமக்கள் உரிமைகளும் அரித்துப்போய்க் கொண்டிருப்பதையும் காண்கிறோம். குடிமக்களை மன்னராட்சியின் கீழ் உள்ள மக்கள் என்பதுபோல் சுருக்கி பார்க்கும் போது இயல் பாகவே சமூக நீதியும் குறைத்து மதிப்பிடப் படுகிறது. ஒட்டுமொத்த குடியுரிமைகள் வரம்புக் குள்ளும் ஒட்டுமொத்த அரசியலமைப்பு உரிமைகள் வரம்புக்குள்ளும் நமது போராட்டக் களம் இருக்க வேண்டும். அதன் மூலம் சமூக நீதிக்காக ஒரு நல்ல சூழ்நிலையையும் ஒரு நல்ல அடித்தளத்தையும் உருவாக்க முடியும்.

நாம் சாதி ரீதியான கணக்கெடுப்பையும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்தவும் கோருகிறோம். விரிவுபடுத்தப்பட்ட இடஒதுக்கீட்டின் மூலம், அதாவது இடஒதுக்கீட்டின் எல்லையை அதிகரிப்பதன் மூலம், தனியார் துறைக்கும் இட ஒதுக்கீட்டை விரிவுபடுத்துவதன் மூலம் இடஒதுக்கீடு இன்னும் அர்த்தமுள்ளதாகும். உறுதியான நடவடிக்கை இருந்தாலும் கூட இடஒதுக்கீடு ஒரு வரையறுக்கப்பட்ட தாக்கத் தைதான் ஏற்படுத்துகிறது. அதிகரித்த அளவில் சமூக அசைவும் அதிகரித்த அளவில் மக்கள் உரிமைகள் விரிவாக்கப்படுவதும்தான் தேவை. சமூக நீதிக்கான போரானது சமூக தளத்தில் நடத்தப்பட வேண்டியதை நாம் உறுதி செய்வது மிக முக்கியமானதாகும். பாஜக அல்லாத கட்சிகள், முக்கியமாக சமூகநீதியை, சமூக சமத்துவத்தை, குடிமக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை நோக்கமாகக் கொண்ட கட்சிகள் பரந்த அளவில் ஒன்றிணைவது போரை நிச்சயமாக வலுப்படுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த முக்கியமான தளத்தில் மாநாட்டினை நடத்தும் அமைப்பாளர்களுக்கு நான் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டின் செய்தி இந்திய மக்களின் ஒவ்வொரு பிரிவினரிடமும் சென்ற சேரும் என்றும் சமூக நீதிக்கான கனவை நனவாக்க, 21ம் நூற்றாண்டிலும் முடியாட்சி வழிகளுக்கு, மனுஸ்மிருதியின் வழிகளுக்கு இந்தியாவைப் பின்னுக்குத் தள்ள முயற்சிக்கும் பாசிச சக்திகளின் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் கனவை நனவாக்க நாம் அனைவரும் கைகோர்த்து ஒன்று சேர்ந்து முன்னேறுவோம் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் அனைவரும் விடுதலைப் போராட் டத்தின் மதிப்புகளைப் போற்றியும் உயர்த்திப் பிடித்தும் சமூக மாற்றத்திற்கான இலக்குகள் தான் இந்தக் குறிக்கோளைப் பாதுகாக்கும் என்ற வகையில், அநீதியை, சமத்துவமின்மையை, அழிவுச் சக்திகளைத் தோற்கடித்து இலக்கை அடைவோம். மிக்க நன்றி. ❑


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம்
இருமுறை

நன்கொடை தாரீர்!!

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

# பொதுத் திட்டம்

## முகப்புரை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்), தனது உன்னதமான வர்க்க லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக போராடிக் கொண்டிருக்கும், இந்திய பாட்டாளி வர்க்கத்தின், அதிஉயர்ந்த அரசியல் அமைப்பாகும். அது, மக்களின் முன்னேறிய பிரிவினரை தன்னகத்தே கொண்டுள்ளது. நிலப்பிரபுத்துவ தளைகளில் இருந்தும் பெருமூலதனம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் சூறையாடல் மற்றும் ஆதிக்கத்தில் இருந்தும் விடுதலை பெறுவதற்கான இந்திய மக்களின் தேடலில், அதன் தலைமைக்கருவாக விளங்குவதுடன், பால், சாதி, நம்பிக்கை, மொழி அல்லது தேசிய இனம் எதுவாயினும் அவற்றைப் பொருட்படுத்தாது, அனைவரும் சுதந்திர குடிமக்களாக சம உரிமைகளையும், துரித முன்னேற்றத்தையும் பெறுவதற்காக நிற்கிறது.

இந்தியாவில், புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதை, குறைந்தபட்சத் திட்டமாகக் கொண்டுள்ளது, உயர்ந்தபட்சத் திட்டமான சோசலிச மாற்றத்தையும், கம்யூனிசத்தையும் கொண்டுவரவும், தனது இறுதி இலட்சியமான, மனிதரை மனிதர் சுரண்டும் அனைத்து வகைச் சுரண்டலையும் ஒழித்துக் கட்டவும், கட்சி தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

கட்சி, தனது உலகக் கண்ணோட்டத்தை மார்க்சிய சித்தாந்தத்திலிருந்து பெறுகிறது; ஒருங்கிணைந்த முறையான மார்க்சிசம்-லெனினியம் மாசேதுங் சிந்தனையை செயலுக்கு வழிகாட்டியாக ஏற்றுக்கொள்கிறது. இந்தியப் புரட்சியின் சரியான வழியை வளர்த்தெடுக்க, கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும், சீர்திருத்தவாதம், திரிபுவாதம், அழிவுவாதம், முதலாளித்துவ தாராளவாதம், அராஜகவாதம் மற்றபிற அனைத்து தவறான கருத்துக்களுக்கும், போக்குகளுக்கும் எதிராக, கட்சி, சளைக்காத போராட்டத்தை நடத்துகிறது.

கட்சி, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிக்கிறது. செயல்படுத்துகிறது. சர்வதேச உறவுகளில், எல்லா வகையான ஏகாதிபத்தியம், மேலாதிக்கம், காலனியம்/நவகாலனியம், விஸ்தரிப்புவாதம், இனவாதம், குறுகிய வெறிவாதம், ஆக்கிரமிப்பு, ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்க்கிறது. உலகின் எல்லா பகுதிகளிலுமுள்ள, எல்லா புரட்சிகர கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுடனான, அமைப்புக்களுடனான ஒற்றுமையைக் கட்சி பெரிதும் மதிக்கிறது. உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களது போராட்டங்களைக் கட்சி ஆதரிக்கிறது. அத்துடன், மானுடம் முழுவதும் முழுமையாக விடுதலை அடைய வேண்டுமென்ற இறுதி லட்சியத்தை அடையும் நோக்கத்திற்காக, ஏகாதிபத்தியம், பிற்போக்கு சக்திகளுக்கெதிரான, எல்லா இயக்கங்களோடும் கட்சி அய்க்கியப்படுகிறது. சகோதரத்துவ உறவுகள் குறித்த விசயங்களில் சுதந்திரம், தலையிடாமை, சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகளை கட்சி கடைபிடிக்கிறது.

கட்சி வேலை நடையில், தத்துவத்தை நடைமுறையோடு ஒன்றிணைப்பது, மக்களோடு நெருக்கமான உறவுகளை வைத்திருப்பது, விமர்சனத்தையும், சுயவிமர்சனத்தையும் நடைமுறைப்படுத்துவது உரிய நேரத்தில் தவறுகளைத் திருத்திக் கொள்வது ஆகியவை மூன்று பிரதான கோட்பாடுகளாகும். கட்சி தன் நடைமுறையை வளர்த்தெடுப்பதற்கு எப்போதுமே யதார்த்த விவரங்களில் இருந்து உண்மையைக் கண்டறிவது என்ற கொள்கையைப் பின்பற்றுவதுடன், ஆழமான ஆய்வுகளையும் காத்திரமான படிப்புகளையும் மேற்கொள்ளுகிறது.

கட்சி உறுப்பினர்கள், மக்கள் மீது அதிஉயர்ந்த நேசம் கொண்டிருப்பவர்கள். அவர்கள் இந்திய சமுதாயத்தின் அனைத்து மிகச் சிறந்த புரட்சிகர மரபுகளையும் உயர்த்திப் பிடிப்பவர்கள். அவர்கள் உண்மை மற்றும் கம்யூனிசம் என்கிற பதாகையை உயர்த்திப் பிடிப்பதற்கு தங்கள் இன்னுயிரையும் விலையாகக் கொடுக்கும் துணிச்சல் கொண்டவர்கள். ❑

---

இந்த இதழ் முதல், கட்சி ஆவணங்களை தொடராக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக, கட்சி பொதுத்திட்டத்தின் முதல் பகுதி இங்கு வெளியிடப்படுகிறது.

# மதுரை மாவட்டத்தில் நிலமீட்பு போராட்டங்கள்

**– சி. மதிவாணன்**

*நகர்மயமாதல் அதிகமாகிவருகிறது. அதன் தாக்கம் கிராமப்புற பகுதிகளுக்கும் பரவுகிறது. பெருநகரங்களுடன் சாலைகளால் இணைக்கப் பட்டுள்ள பேரூராட்சிகளின் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. கிராமங்களில், தங்கள் தங்கள் சாதி வளைகளில் சிக்குண்ட மக்கள் குடியிருப்புகள் போதாமல் விழிபிதுங்குகின்றன. அவர்கள் தங்களுக்கான புதிய வீடுகளைக் கட்டிக்கொள்ளாதபடி, நிலத்தின் விலை அதிகரிப்பும், சாதிச் சுவர்களும் தடுக்கின்றனர். இதனால் கிராமப்புறங்களில் வீட்டுமனைக்கான தேவை அதிகரித்தும் வீடுகளை உருவாக்கிக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. வீட்டுமனை கேட்டு தாசில்தார் அலுவலகங்களை மக்கள் அணுகும்போது, "புறம்போக்கு இல்லை, இருந்தால் பார்க்கிறோம்.. நீங்கள் கூட புறம்போக்கை அடையாளம் காட்டுங்கள்" என்று வருவாய் துறை அதிகாரிகள் கதைப்பது வழக்கம்.*

*ஆனால், அவர்கள்தான் நிலத்தைக் காக்கும் காவலர்கள். இந்த காவலர்களின் உதவியோடு அரசு நிலங்களை செல்வாக்குள்ள தனி நபர்கள் மடக்கிப்போடுவது நடக்கிறது. நிலத்தைத் திருடும் சமூக விரோதிகளுக்கு வருவாய் துறையே உதவியாக இருந்திருக்கிறது. இத்தகைய சூழலில்,*

*1) ஆதி திராவிட மக்கள் வீட்டுமனை வாங்குவதில் உள்ள சமூக சிக்கலையும் கருத்தில் கொண்டு ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு வழங்குவதற்கு தமிழக அரசு அதிகாரிகளை நியமனம் செய்திருக் கிறது. அதன்படி, மதுரை மாவட்டம், வாடிப் பட்டி வட்டம் தெத்தூரில் வாழும் ஆதி திராவிடர்களுக்கு ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்பு, கருணாநிதி முதல்வராக இருந்த காலத்தில், ஒன்றரை ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வாங்கப்பட்டு மனையாக்கி பட்டா அளிக்கப் பட்டது. ஆனால், நிலத்தை விற்ற ஆதிக்க சாதி நபர், அதே நிலத்தை வேறு ஒருவருக்கும் விற்றுவிட்டதாக ஆவணப் பதிவு செய்தார். நிலத்தில் யாரும் நுழைந்துவிடாதிருக்க நுழைவுப் பகுதியில் பழ மரங்களை நட்டு விவசாயமும் செய்தார். சாதி ஆதிக்கத்திற்குப் பயந்த மக்கள் நிலத்தின் மீதான கோரிக்கையைத் தங்கள் மனதில் புதைத்துக்கொண்டனர். 20 ஆண்டுகள் கடந்த நிலையில், புதிய தலைமுறைகளின் வருகையின் காரணமாக, வீட்டுமனை தேவை அதிகரித்தது. ஆக்கிரமிப்புகளை அகற்ற முயற்சி செய்தனர். திமுகவில் இருந்த அந்த மக்கள், அதிலிருந்து விலகி, சிபிஐஎம்எல் கட்சியின் இணைந்தனர்.*

*கட்சியின் வழிகாட்டுதலின்படி, சட்ட விரோதமாக விற்கப்பட்ட நிலத்தின் விற்பனை பதிவை ரத்து செய்ய மக்கள் போராடினர். நிலமீட்பு இயக்கம் என்று சுவரொட்டி பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆதிதிராவிடர் நலத்துறையின் முயற்சியில் விற்பனை பதிவுகள் ரத்து செய்யப்பட்டன. ஆனால், புதிய தாசில்தார் நில மீட்பு, ஆதி திராவிடர் நலத்துறை, நிலத்தை அளந்துகொடுப்பதற்கு மறுத்தது மட்டுமல்லாமல் அலைக்கழித்து விலகச் செய்யும் முயற்சியை மேற்கொண்டார்.*

*குடியிருப்பாளர்களின் (பட்டா பெற்றவர் களின்) சங்கம் ஒன்றை கட்சி உருவாக்கியது. வரப்போகும் குடியிருப்புக்கு அம்பேத்கார் நகர் என்று மக்கள் முடிவு செய்தனர். சங்கத்திற்கான நிதி உருவாக்கப்பட்டது. நிலத்தை அளந்து எடுப்பதற்கான நடவடிக்கைகளை சங்கம் மேற்கொண்டது. பழ மரங்கள் வெட்டி சாய்க்கப் பட்டு காடாக இருந்த பூமியை குடியிருப்புக்கு ஏற்ற நிலமாக்குவதற்கு மக்கள் இறங்கினர்.*

*நில உடமையாளர் தரப்பு புகார் கொடுத் தனர். கட்சியின் மாநில குழு உறுப்பினர் தோழர் ஈஸ்வரி தலைமையில், கிளைச் செயலாளர் விக்கி, அய்சா உறுப்பினர் நவீன் காவல் துறையைச் சந்தித்து ஆவணங்களை அளித்தனர். காவல்துறை அதை ஏற்றுக்கொண்டு விலகிக் கொண்டது. இருந்தபோதும், ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தார் இறங்கிவரவில்லை. அவரின் மக்கள் விரோத போக்கை அம்பலப் படுத்தி சுவரொட்டி வெளியிடப்பட்டு ஊடகங் களுக்கு செய்தி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் என்று அறிவிக்கப்பட்டது. விளைவாக, தாசில்தார் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். நிலத்தை அளந்து கொடுப்பதாக உறுதி அளித்து அதற்கான வேலைகளை உடனடியாகத் துவங்கினார். தற்போதைக்கு போராட்டத்தைத் திரும்பப் பெறுவது என்றும் தேவைப்பட்டால் போராட்ட ஆயுதத்தைக் கையிலெடுப்பது என்றும் குடியிருப்போர் சங்கம் தீர்மானித்துள்ளது.*

*2) வாடிப்பட்டி அருகே உள்ள விராலிப்பட்டி மலையடிவாரத்திற்கும் வாடிப்பட்டி நான்கு வழிச் சாலைக்கும் இடைப்பட்ட கிராமம். விவசாய நிலம், வீட்டுமனை விரிவாக்கத்திற்கு எந்த வாய்ப்பும் இல்லாத ஊர். தலைமுறைகளின் வளர்ச்சியில் வீட்டு மனை தேவை அதிகரித்துள்ள தமிழக கிராமங்களில் ஒன்று.*

*அந்த ஊருக்கும் மலைக்கும் இடைப்பட்ட சர்வே எண் 127 என்ற அரசு நிலத்தை (ஓடையை ஒட்டியுள்ள நிலம்) தனியார் ஒருவர் 10 லட்சம் ரூபாய்க்கு, முந்தைய ஆக்கிரமிப்பாளரிடமிருந்து வாங்கியிருக்கிறார். பொது நிலத்தின் பரப்பு 10.95 ஏக்கர். அதனைச் சுற்றி வேலி எழுப்பினார். இதனால், கோபமடைந்த மக்கள் சிபிஐ எம்எல் கட்சியை அணுகினர். கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியருக்கு 24.01.2023 அன்று புகார் அளிக்கப்பட்டு நெருக்கடி கொடுக்கப்பட்டது. வருவாய் துறையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பாளர் வேலியை அகற்றினார். புறம்போக்கின் தெற்குப் பகுதியில் அவரது ஆக்கிரமிப்பு வேலி நீடிக்கிறது என்று கருதிய மக்கள் மீண்டும் நில அளவை கோரி, கட்சியின் கிளைச் செயலாளர் தோழர் ஒச்சா தேவர் முன்முயற்சியில் வருவாய் துறைக்கு நெருக்கடி கொடுத்தனர். நில அளவைக்கு பணம் கட்டும்படி ஊராட்சியை நிர்ப்பந்தம் செய்தனர். நில ஆக்கிரமிப்பாளருக்குத் துணையாக இருந்த உள்ளாட்சி தலைவரும் அவரின் கணவரும் முதலில் மறுத்தனர். மக்களின் கோபத்தைச் சமாளிக்க முடியாமல், வேறுவழியின்றி, பணத்தைக் கட்டினர். இருந்தாலும், நில அளவை செய்யாமல் வருவாய் துறை இழுத்தடித்தது.*

*நிலத்தை அளந்துகொடுக்கும்படி வருவாய்த் துறைக்கு மீண்டும் நெருக்கடி கொடுக்கப்பட்டது. வேறுவழியின்றி, 3 பேர் வந்து நிலத்தை அளந்தனர். இகக(மாலெ) மாவட்ட செயலாளரும் கிளை செயலாளரும் பொது மக்களுடன் நின்று அளவைக் கண்காணித்தனர். ஆக்கிரமிப்பாளர் அமைத்துள்ள வேலி பொது நிலத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை வருவாய் துறையின் அளவை காட்டியது. ஆனால், புதிய எல்லைக்கான கல்லை நாட்டாமலும் ஆக்கிரமிப்பு வேலியை அகற்றாமலும் வருவாய் துறை கையைக் கட்டிக்கொண்டது.*




*அதன்பின் கிராம மக்கள் அனைவரும் சாதிய பாகுபாடு இன்றி ஒன்றிணைத்து தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டு நில மீட்பு கமிட்டி அமைக்கப்பட்டது. ஆக்கிரமிப்பை அகற்றாத வருவாய் துறையை நிர்ப்பந்திக்க எடுத்த முயற்சிகள் பலன் அளிக்காததால், ஆக்கிரமிக்கப் பட்ட புறம்போக்கு நிலப்பகுதிக்குள் "விராலிப்பட்டி சமத்துவபுரம் பொதுமக்கள் மீட்பு" என்றும், "சிபிஅய் எல்எல் கட்சி" என்றும் எழுதப்பட்ட பலகையை 28.09.23 அன்று ஊன்றினர். இதற்காக, ஆக்கிரமிப்பாளரின் வேலிகளைத் தாண்டிச் சென்றனர். மாவட்ட கமிட்டி உறுப்பினர்கள் முத்துராக்குவும் சண்முகமும் மக்களை வழி நடத்தினர்.*

*இதனால் கோபமுற்ற ஆக்கிரமிப்பாளர் தன் சாதி ஆட்களைத் திரட்டவும், போலீசில் புகார் கொடுக்கவும் மிரட்டவும் முயன்று வருகிறார். இகக(மாலெ) கட்சியினர் மீது லட்சங்களில் லஞ்சம் பெற்றதாகவும் பிரச்சாரம் செய்யப் படுகிறது. இதற்கிடையில், 30.09.2023 அன்று விராலிப்பட்டியில் கட்சி கிளைச் செயலாளரின் முயற்சியில் நில மீட்பு கமிட்டி கூட்டம் நடந்தது. அனைத்து சாதிகளையும் சேர்ந்த மக்கள் கலந்துகொண்ட அக்கூட்டம் பொது நிலத்தை தனியார் ஆக்கிரமிப்பதை வேடிக்கை பார்க்கும், துணைபோகும் வருவாய் துறைக்கு எதிராக கட்டம் கட்டமான போராட்டங்களைக் கட்டமைக்கத் தீர்மானித்துள்ளது. தனியார் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள அரசு நிலங்களின் பட்டியல் வெளியிடுவது என்றும் மக்களுக்கான புதிய குடியிருப்புப் பகுதிகளை ஆக்கிரமிக்கப் பட்ட நிலங்களில் அரசு அமைத்துத் தர வேண்டும் என்றும் கோரிக்கை பிரச்சார இயக்கம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ❑*

# அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் 9வது அகில இந்திய மாநாடு




*அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் 9 ஆவது அகில இந்திய மாநாடு டெல்லி, எச்.கே.எஸ்.சுர்ஜித் பவனில் 30.9.2023 மற்றும் 1.10.2023 தேதிகளில் நடைபெற்றது. மாநாட்டில் நாடு முழுவதிலும் இருந்து 500 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முதல் நாள் நடைபெற்ற துவக்க மாநாட்டில் 1000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர். எழுத்தாளர் அருந்ததி நாய், நேகா சிங் ரத்தோர், நவ்சரண் கவுர், பாஷா சிங், சுதேஷ் கோயல், மீனா கோட்வான் மற்றும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம், இந்திய தேசிய பெண்கள் சம்மேளனம் ஆகியவற்றின் தலைவர்களும் உரையாற்றினர்.*

இரண்டாம் நாள் மாநாட்டில் பல்வேறு பிரச்சனைகள் மீது விவாதங்கள் நடைபெற்றன. விவாதங்களுக்குப் பின்னர் அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 151 பேர் கொண்ட புதிய தேசியக் கவுன்சில் தேர்வு செய்யப்பட்டது. தோழர் ரத்திராவ் அகில இந்திய தலைவராகவும் தோழர் மீனா திவாரி அகில இந்திய பொதுச் செயலாளராகவும் மீண்டும் தேர்வு செய்யப் பட்டார்கள். இந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து 25 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மாநாட்டில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள பெண்கள் மசோதா, வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, ஒரு சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் ரகசியமாக அறிமுகப் படுத்தப் பட்டது. இதுவே பாஜகவின் கெட்ட எண்ணத்தை வெளிக்காட்டுகிறது. பெண்களுக்கு இடஒதுக்கீடு கிடைத்துவிட்டது என்பது போல் காட்டு கிறார்கள். ஆனால், நடைமுறையில் அதை அமல்படுத்த முடியாது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி எல்லை மறுவரையறை செய்த பின்புதான் அமல்படுத்தப் படும் என்கிறார்கள். இந்த மசோதா நிறைவேற்றப் படுவதற்கு 27 ஆண்டுகள் ஆகியுள்ளது. இந்த கால கட்டத்தில் வாஜ்பாய் 5 1/2 ஆண்டுள், மோடி 9 1/2 ஆண்டுகள் என பாஜகவின் கூட்டணி ஆட்சி பாதிக்கும் மேற்பட்ட காலம் ஆட்சியில் இருந்துள்ளது. தலித், மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கு சட்ட பூர்வமாக தனி இடஒதுக்கீடுக்கான கோரிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு அஇமுபெக முழு ஆதரவைத் தெரிவிக்கிறது. பெண்களை விலக்கி வைத்துவிட்டு சமூகநீதியைக் காணமுடியாது. இன்று பாஜகவும் சமூக நீதி பற்றி பேசுகிறது. ஆனால், பெண்களுக்கு சமூக நீதி என்றால், மோடி பெண்கள் ஒற்றுமை பற்றி பேசுகிறார். இந்த ஆணாதிக்க அமைப்பு முறையில், எல்லா சமூகத்திலும் பெண்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத் தான் இருக்கிறார்கள். தலித், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை சமூகத்தின் பெண்கள் இரண்டு வழிகளில் உரிமைகள பறிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளா கிறார்கள். இன்றும் கூட அவர்களுக்கு கிடைக்கும் கல்வியும் வேலை வாய்ப்பும் மிகச் சொற்பமே. அதிலும் முஸ்லிம் பெண்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்த 33% இடஒதுக்கீட்டிற்குள், தலித், மிகவும் பிற்படுத்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறு பான்மை பெண்களுக்கு உரிய பங்கீடு வழங்கப் பட

வேண்டும் என அஇமுபெக கோருகிறது.

2. கடந்த 5 மாதங்களாக மணிப்பூர் மிகக் கொடூரமான வன்முறையை சந்தித்து வருகிறது. நூற்றுக் கணக்கான பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். கொலை, தீ வைப்பு, பெண்கள் மீதான வன்முறை, பாலியல் வல்லுறவு, கூட்டு பாலியல் வல்லுறவு ஆகியவை நடந்து கொண்டிருக் கின்றன. மணிப்பூரில் பாஜக ஆட்சி நடக்கிறது. பிரிவு 353ன் கீழ் நிர்வாகம் மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், ஒன்றிய அரசு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மணிப்பூரின் முதல்வர் இன்னும் நீக்கப்பட வில்லை. ஒன்றிய அரசு ஊரடங்கை சில மாவட்டங்களுக்கு மட்டும் ஆறு மாதங்களுக்கு அறிவித்துள்ளது. சில மாவட்டங்களில் சுதந்திர மான செயல்பாடுகளுக்கு அனுமதித் துள்ளது. இது முற்றிலும் ஒரு தலைப்பட்ட நடவடிக்கை யாகும். மணிப்பூரின் நிவாரண முகாம்கள் மிக மோசமாக உள்ளதை முற்போக்கு பெண்கள் கழகத்தின் உண்மை அறியும் குழு நேரடியாகக் கண்டது. மத அடிப்படையில் பழங்குடி மக்களைப் பிரிக்கும் சதிச் செயல் நிறுத்தப்பட வேண்டும். மணிப்பூரின் முதல்வர் பதவியில் இருந்து பைரோன் சிங் நீக்கப்பட வேண்டும்.

3. சுகாதாரம், கல்வி என அனைத்திலும் தனியார்மயம் தலைவிரித்தாடுகிறது. அவை ஏழைப் பெண்களுக்கு எட்டாக் கனியாக மாறிவிட்டது. பொது பள்ளி முறை, ஒவ்வொரு ஊராட்சியிலும் பெண்களுக்கான அரசுக் கல்லூரி, பட்டப்படிப்பு வரை பெண்களுக்கு இலவசக் கல்வி ஆகியவை வேண்டும் என அஇமுபெக கோருகிறது. சுகாதாரத் துறையில் தனியார்மயம் தடுக்கப்பட வேண்டும். போதுமான மருத்து வர்கள், செவிலியர்கள், மருந்துகள், மருத்துவக் கருவிகளுடன் கூடிய சுகாதார மையங்கள் பஞ்சாயத்து மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். அவை நிறைவேற்றப்படும் வரை தொடர் போராட்டங்களை முற்போக்கு பெண்கள் கழகம் நடத்தும்.

4. வேலைக்குச் செல்லும் பெண்கள் மத்தியில் நடக்கும் பாகுபாடு, பணியிடத்தில் நடக்கும் பாலியல் தொந்தரவுகள், வன்முறை களுக்கு எதிராக, அவற்றிற்கு முடிவு காணும் வரை அஇமுபெக தொடர்ந்து குரல் கொடுக்கும். இன்று பல்வேறு துறைகளில், விவசாயத்திலும் கூட பெண்கள் ஆண்களைவிட குறைந்த கூலியைத் தான் பெறுகிறார்கள். தனியார் துறைகளில் பெண்கள் பணிப் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில், அதிகப்படியான வேலைகள் செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். பெண்கள் உரிமைகள் முதல் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை வரை பறிக்கப்படுகிறது. திட்டப்பணி யாளர்கள் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட வேண்டும்.

5. ஊட்டச் சத்து, சமையறை மற்றும் கழிவறையுடன் கூடிய வீடுகள், வயதான, கணவனை இழந்த, மாற்றுத் திறனாளி, தனியாக வாழும் பெண்களுக்கு மரியாதைக்குரிய அளவில் ஓய்வூதியம், வேலையில்லா பெண்களுக்கு உதவித் தொகை, அனைவருக்கும் ரூ.500க்கு எரிவாயு உருளை வழங்கப்பட வேண்டும் என்று அஇமுபெக கோருகிறது. வாழ்வாதாரத் திட்டம் என்ற பெயரில் சுய உதவிக்குழுக்கள் மோடி அரசால் உருவாக்கப்படுகின்றன. அவர்கள் கடன் பொறிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். அனை வருக்கும் வாழ்வாதாரத்திற்கு, வேலைக்கு உத்தரவாதமளிப்பதும் வட்டியில்லா கடன் வழங்கப்பட வேண்டும்.

6. மதவெறியைத் தூண்டிவிட்டு பிளவுப டுத்துவதையும் சிறுபான்மையினர் மீதான துன்புறுத்தலையும் அஇமுபெக கண்டிக்கிறது. சாவித்திரிபாய் பூலே மற்றும் பாத்திமா செயிக் ஆகியோரின் வழி மரபை உயர்த்திப்பிடிக்கிறது.

7. பெரும் போராட்டத்திற்குப் பின்னர் LGBTQIA+ சமூகத்தினருக்கு ஓரினச் சேர்க்கையை குற்றமாக்கும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 377 உச்சநீதிமன்றத்தால் ஆதரவாக நீக்கப்பட்டது. பாஜக அந்த சமூகத்தினருக்கான சமத்துவத்தையும் கௌரவத்தையும் கொடுக்க மறுத்துவருகிறது. இந்தியாவில் ஓர் பாலின திருமணத்தைச் சட்ட பூர்வமாக்க ஒன்றிய பாஜக அரசு எதிர்ப்பு தெரிவிக்கிறது. அனைத்து வகை திருமணங் களுக்கும் சமமாக ஏற்றுக் கொள்ளப்பட அஇமுபெக தொடர்ந்து போராடும்.

8. பொது சிவில் சட்டத்தின் பெயரால் மத ரீதியாக பெண்களை பிளவு படுத்தும் சதியை முறியடிக்க வேண்டும். பாலின நீதிக்கான சீர்திருத்தங்கள் தனிப்பட்ட மற்றும் சிறப்புச் சட்டங்களில் ஏற்படுத்துவதற்கான போராட்டத்தை அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் தீவிரப்படுத்திடவும் பெண்கள் விரோத மோடி அரசை வரும் தேர்தலில் ஆட்சியை விட்டு வெளியேற்றவும் மாநாடு உறுதியேற்றது. ❑

# “அவர்களுடைய முறைப்படி ‘ஒன்றை’ உருவாக்குவதற்கு, இந்து இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் மற்றவருடன் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும்”

**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் 9வது அகில இந்திய மாநாட்டில் எழுத்தாளர் அருந்ததிராய் ஆற்றிய உரையின் சுருக்கம்**




இப்போது நம்முடைய அரசாங்கம், ‘ஒரு நாடு, ஒரு தேர்தல், ஒரு வாக்கு, ஒரு மொழி, ஒரு மதம்’ ஆகியவற்றிற்கு அதிக அழுத்தம் கொடுகிறது. அவர்களுடைய முறைப்படி ‘ஒன்றை’ உருவாக்குவதற்கு, இந்து இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் மற்றவருடன் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும். சங்பரிவார் சாதிய முறையின் அடித்தளத்தை நன்கு புரிந்துகொண்டு, அதை பயன்படுத்துவதோடு, அது நிலைத்திருக்கச் செய்ய முயற்சிக்கிறது. திறந்தவெளியில் தீப்பிடிக்க ஒரு தீப்பொறி போதும் என மாவோ கூறினார். ஆனால், நமது சமூகம் திறந்தவெளியல்ல, இது திக்குத் தெரியாத காடு. அதற்குள் தீப்பொறி கூட காணாமல் போகும். சாதிய அமைப்பு முறைதான் அந்த திக்குத் தெரியாத காடு. அந்த திக்குத் தெரியாத காட்டின் வரை படத்தை, சாதிய அரசியல் பண்ணும் கட்சிகளைக் காட்டிலும் சங்பரிவாரங்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். இடஒதுக்கீட்டுக் கொள்கை மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் கூறுகிறார். ஆனால், இந்த சாதியப் பாகுபாடுகள் இருக்கும் வரை இடஒதுக்கீடு தொடரத்தான் வேண்டும். பாஜக, இந்தியா கூட்டணியை இந்துக்களுக்கு எதிரானது என்கிறது. அநேகமாக, 90% முஸ்லீம்கள் பிற்படுத்தப்பட்டோர்கள்தான். ஏன் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள்? ஏனென்றால், அவர்கள் சாதிய அமைப்பு முறையால் ஒடுக்கப்பட்டார்கள். அவர்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டார்கள். சாதிய அமைப்பு கொடுமையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இஸ்லாத்தைத் தழுவியவர்கள் இன்று சாத்தானின் குழந்தைகளாம், அவர்களை அழிக்க வேண்டுமாம். நாம் இன்று காணும் முரண்பாடுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் இந்த சாதிய அமைப்புமுறைதான். அதை உடைப்பதுதான் நமது இலக்கு.

இப்போது நம்மிடம் ‘ஒரு நாடு, ஒரு கம்பெனி’ இருக்கிறது. அதாவது மோடிஜி, கௌதம் அதானி. இதை அப்படியே இருக்கச் செய்வதற்காக, நம்மை இந்த திக்குத் தெரியாத காட்டிற்குள் கொண்டு விடுகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவருக்குமான நேரம் இது... நம்முடைய வேற்றுமைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களை நாம் தோற்கடிக்க வேண்டும். வேறு வழி இல்லை. அது ஒன்றும் முடியாத காரியமும் அல்ல.

## அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக புதுச்சேரி மாநில 9வது மாநாடு



*அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் புதுச்சேரி மாநில 9வது மாநாடு 21.09.2023 அன்று புதுவை தமிழ் சங்கத்தில் தோழர் சரோஜா அரங்கில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மல்லிகா, மீனாட்சி, சுகுணா, விசாலாட்சி, ஜெயா ஆகியோர் தலைமை தாங்கினார்கள். மாநாட்டில் வேலை அறிக்கை மாநிலச் செயலாளர் விஜயா சமர்ப்பித்தார். இகக(மாலெ) புதுச்சேரி மாநிலச் செயலர் எஸ்.புருஷோத்தமன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாநாட்டில் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தேசியத் தலைவர் டாக்டர் ரத்தி ராவ் சிறப்புரையாற்றினார். இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர் சோ.பாலசுப்பிரமணியன், புதுச்சேரி மாவட்டச் செயலர் முருகன், புதுச்சேரி நகரச் செயலாளர் அருள், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தேசிய கவுன்சில் உறுப்பினர் காந்திமதி ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாநாட்டில் தலைவராக மல்லிகா , செயல் தலைவராக மீனாட்சி, மாநிலச் செயலாளராக விஜயா, உள்ளிட்ட 17 பேர் கொண்ட செயற்குழு தேர்வு செய்யப்பட்டனர்.*

## புதுச்சேரியில் அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனம் பரப்புரை இயக்கம்



கட்டுமானத் தொழிலாளர் நல வாரியங்களை ஒன்றிய பாஜக அரசு சீர்குலைப்பதை கண்டித்தும் அதற்கு துணை போகும் ரங்கசாமி நமச்சிவாயம் இரட்டை எஞ்சின் ரியல் எஸ்டேட் கூட்டணி ஆட்சியை அம்பலப்படுத்தியும் அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனம் புதுச்சேரி மாநில கமிட்டி சார்பில் பரப்புரை இயக்கம் செப்டம்பர் 6, 7 தேதிகளில் ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. பரப்புரை இயக்கத்தை அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளன தேசிய தலைவர் சோ.பாலசுப்பிரமணியன் துவக்கி வைத்தார். கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐசிசிடியு மாநிலச் செயலர் புருஷோத்தமன், ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.அருள், பொருளாளர் விஜயா, ஏஐசிசிடியு துணைத் தலைவர் கோ.பழனி, இகக(மாலெ) மாநில கமிட்டி உறுப்பினர் மல்லிகா, புரட்சிகர இளைஞர் கழகம் சுவாதி மார்த்தாண்டன் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு பேசினர். ❑

# ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட முதல் மாநாடு



*தென்காசி மாவட்ட ஏஐசிசிடியு முதல் மாநாடு தென்காசியில் 1.10.2023 அன்று காலை நடைபெற்றது. சிவில் சப்ளை குடோன் முன்பு உள்ள லோடுமேன் சங்க கொடிக்கம்பத்தில் சங்கத்தின் மூத்த தோழர் ஆர். முருகையா மாநாட்டுக் கொடியேற்றினார். ஏஐசிசிடியு மாவட்ட நிர்வாகிகள் அயுப்கான், புதியவன் என்ற சுப்பிரமணியன், பேச்சிமுத்து, பொட்டுச்செல்வம், அழகையா, சுப்பிரமணியன், பரமேஸ்வரி ஆகியோர் கொண்ட தலைமை குழு மாநாட்டை வழி நடத்தியது. மாவட்ட நிர்வாகி மாதவன் வரவேற்புரையாற்றினார். மாநாட்டைத் துவக்கி வைத்து ஏஐசிசிடியு மாநில பொதுச் செயலாளர் கே.ஞானதேசிகன் சிறப்புரையாற்றினார். வேலை அறிக்கையை மாவட்ட பொது செயலாளர் எம். வேல்முருகன் முன்வைத்துப் பேசினார், மாநாட்டு வரவு செலவு அறிக்கையை மாவட்ட பொருளாளர் எஸ் குருசாமி முன்வைத்தார். பிரதிநிதிகளின் விவாதத்திற்கு பின்பு ஏஐசிசிடியு மாநில தலைவர் டி. சங்கரபாண்டியன் மாநாட்டை நிறைவு செய்து பேசினார். மாவட்ட நிர்வாகி பேச்சிமுத்து நன்றி கூறினார். ஏஐசிசிடியு தென்காசி மாவட்டத் புதிய தலைவராக அயூப்கான், கௌரவத் தலைவராக தி.புதியவன் (எ) சுப்பிரமணியன், பொதுச் செயலாளராக எம்.வேல்முருகன், பொருளாளராக செ.மாதவன் மற்றும் 8 துணைத் தலைவர்களும் 7 துணைச் செயலாளர்களும் தேர்வு செய்யப்பட்டனர்.*

# திண்டுக்கல் ஊழியர் பயிற்சி முகாம்



*சிபிஐஎம்எல் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட முன்னனி ஊழியர்களுக்கான சமூக, பொருளாதார, அரசியல் பயிற்சி முகாம் குஜிலியம்பாறை வட்டம், புளியம்பட்டி சமுதாயக் கூடத்தில் மாவட்ட செயலாளர் தோழர் சுப்புராமன் தலைமையில் நடை பெற்றது. மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் சிம்சன் கலந்து கொண்டு வகுப்பு எடுத்து சிறப்பித்தார்.*

# காத்திருப்புப் போராட்டம்



சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம், குறிச்சி கிராமத்தில் சிபிஐஎம்எல் கட்சியின் சார்பாக 25.9.2023 அன்று, வீட்டுமனை பட்டா கேட்டு காத்திருப்பு போராட்டம் நடத்தப்பட்டது. அன்று மாலை சம்பந் தப்பட்ட அதிகாரிகள், தாசில்தார், வருவாய்த் துறை அதிகாரி, கிராம நிர்வாக அலுவலர், காவல்துறையினர் பேச்சு வார்த்தை செய்தனர். "ஒரு மாதத்திற்குள் பட்டா வழங்குகிறோம்" என்று உறுதி அளித்ததன் காரணமாக காத்திருப்பு போராட்டம் முடிவுக்கு வந்தது. இந்தப் போராட்டத்திற்கு சிபிஐஎம்எல் கட்சி ஊராட்சி செயலாளர் குபேந்திரன் தலைமை தாங்கினார். ராஜவீதி பகுதி கிளைச் செயலாளர் மணிகண்டன், நாடார் சாலை பகுதி கிளைச் செயலாளர் சித்ரா முருகன் கோயில் ஸ்ரீமகாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் குழு உறுப்பினர் மோகனசுந்தரம் சிபிஐஎம்எல் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் வி.ஐயந்துரை, குள்ளம்பட்டி கிளைச் செயலாளர் குமார் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் மூன்று கிளைகளையும் கூட்டி அடுத்த கட்ட போராட்டங்கள் பற்றி திட்டமிடுவது என முடிவு செய்யப்பட்டது.

# ஏஐசிசிடியு டாஸ்மாக் தொழிலாளர்கள் போராட்ட அறிவிப்பு

தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கம் (ஏஐசிசிடியு) சார்பாக மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் போராட்ட ஆயத்தக் கூட்டம் 2.10.2023 அன்று நடைபெற்றது. டாஸ்மாக் ஊழியர்களின் பணி நிரந்தரம், கால முறை ஊதியம் மற்றும் 20 ஆண்டுகளாக கொத்தடிமைகளாக பணிபுரியும் விற்பனையாளர்களின் பிரச்சினையை தீர்க்கக் கோரி தலைமைச் செயலகம் முற்றுகை போராட்டம் நடத்திடவும் அலுவலக நாட்களில் போராட்டம் நடத்தினால் தான் நமது கோரிக்கையை வென்றெடுக்க முடியும் என்ற அடிப்படையில் டிசம்பர் 7 அன்று முற்றுகைப் போராட்டம் நடத்த ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அனைத்து விற்பனையாளர் மற்றும் உதவி விற்பனையாளர்கள் அகில இந்திய தொழிற்சங்கம்(ஏஐசிசிடியு) நடத்தும் போராட்டத்தில் கலந்து கொண்டு கோரிக்கையை வென்றெடுக்க ஒன்றுபடுவோம். கூட்டத்தில் ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் டி.சங்கரபாண்டியன், டாஸ்மாக் விற்பனையாளர் சங்க சிறப்புத் தலைவர் இரணியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.



## தோழர் அப்பு ஆரம்பித்த தீக்கதிர் பத்திரிகையின் 5வது - நெல்லை பதிப்பு துவக்க நிகழ்ச்சியில் தோழர் அப்புவின் இகக(மாலெ) தோழர்கள்




மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளிதழான தீக்கதிர் பத்திரிகையின் 5ம் பதிப்பு 22.9.2023 அன்று நெல்லையில் துவங்கப்பட்டது. நெல்லை பதிப்பு அலுவலகத்தை மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார். திறப்பு விழாவில், இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினரும் தீப்பொறி ஆசிரியருமான தோழர் ஜி.ரமேஷ் மற்றும் இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சுந்தர்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீப்பொறி ஆசிரியர் பேசும்போது, தோழர் அப்பு என்ற அற்புதசாமியால் 1963 ஆம் ஆண்டு ஜூன் 29 அன்று தொடங்கப்பட்டது 'தீக்கதிர்' பத்திரிகை. அவர்தான் இகக(மாலெ) கட்சியின் முதல் மாநிலச் செயலாளரும் ஆவார். தோழர் அப்புவால் ஆரம்பிக்கப்பட்ட தீக்கதிர் பத்திரிகையின் 5ம் பதிப்பு நிகழ்ச்சியில் அவரை முதல் மாநிலச் செயலாளராகக் கொண்ட இகக(மாலெ)யின் தீப்பொறி பத்திரிகை ஆசிரியரான நான் உரையாற்றுவதில் உள்ளபடியே மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். இந்த பெருமைமிகு தருணத்தை எனக்குத் தந்த தோழர்களுக்கு நன்றி. செப்டம்பர் மாதம் மிகவும் முக்கியமான மாதம். மக்கள் நலனே கட்சியின் நலன் என்றும் மக்கள் நலனே தங்கள் நலன் என்றும் வாழ்ந்து மறைந்த தியாகிகள் பிறந்த மறைந்த மாதம். தோழர் அப்புவின் வழியில் செயல்பட்ட தோழர்கள் சந்திரகுமார்–சந்திரசேகர் இருவரும் தியாகியான நாள் செப்.2, திருநெல்வேலி புரட்சிக்கு வித்திட்ட, தொழிலாளர்களின் தலைவராக, ஆங்கியேருக்கு எதிராக கப்பல் கம்பெனியை நடத்திய வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் செப்.5, புரட்சிக் கவிஞர் பாரதி பிறந்த நாள் செப்.11, தியாகி இம்மானுவேல் சேகரனும் அதே செப்.11ல்தான் தியாகியானார். அறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்.15, தந்தை பெரியாரின் பிறந்தநாள் செப்.17, இந்திய விடுதலைப் போரின் புரட்சி நாயகன் தூக்குக் கயிறை முத்தமிட்ட தோழர் பகத்சிங் பிறந்தநாள் செப்.28, சாணிப்பாலுக்கும் சவுக்கடிக்கும் எதிராக, அடித்தால் திருப்பி அடி என்று தஞ்சை மண்ணில் உணர்வெழுச்சியை ஊட்டிய தோழர் சீனிவாசராவ் நினைவு நாள் செப்.30. கம்யூனிஸ்ட் கட்சிக்கும் விடுதலைப் போருக்கும் சமூகநீதிக்கும் மிக முக்கியமான மாதமான செப்டம்பர் மாதத்தில் தீக்கதிரின் நெல்லை பதிப்பு துவக்கப்படுவது மிகப் பொருத்தமானதாகும். தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் காவிப் பாசிச கும்பல், சர்சைகளை உருவாக்கி அரசியல் செய்யப்பார்க்கிறது. அதுவும் தமிழகத்தின் சர்சைகளை வட இந்தியாவில் இருந்துதான் தொடங்குவார்கள். பெருமாள்முருகன்–அர்த்தநாரி பிரச்சினையை வடஇந்தியாவில் இருந்துதான் ஆரம்பித்தார்கள். அதைப்போல வைரமுத்து–ஆழ்வார், கருப்பர் கூட்டம்– கந்தசஷ்டிக் கவசம் என்று இப்போது உதயநிதி ஸ்டாலின்– சனாதனம் பிரச்சினையையும் வடநாட்டு போலிச் சாமிரை வைத்து ஆரம்பித்தார்கள். இந்தச் சூழ்நிலையில், சனாதம் பற்றி நமது தோழர்களுக்கு தெளிவுபடுத்த, தீக்கதிர் முக்கிய பங்காற்றுகிறது. திருநெல்வேலி திசையன்விளையில் நடைபெற்ற முத்தையாவின் சாதியாதிக்க ஆணவப்படுகொலையை வெளிச்சம் போட்டு காட்டியதில் தீக்கதிருக்கு பெரும் பங்கிருக்கிறது. தீக்கதிர் பத்திரிகையின் 5ஆம் பதிப்பு வெற்றி பெற இகக(மாலெ)–தீப்பொறி வாழ்த்துகிறது. ❑

## நியூஸ் கிளிக் அலுவலகத்தில் சோதனை - ஊடகச் சுதந்திரம் மற்றும் மாற்றுக் கருத்து குரல்கள் மீதான மோடி- பாஜக ஆட்சியின் தாக்குதலுக்கு கண்டனம்

*நியூஸ் கிளிக், தனியார் ஊடகத்தின் ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், ஊழியர்கள் மீது அக்டோபர் 3 அன்று பெரிய அளவில் போலீஸ் சோதனை நடத்தப்பட்டிருப்பதானது நாடு மிக மோசமான அவசரநிலையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படையாகவே பிரதிபலிக்கிறது. மோடி-பாஜக ஆட்சிக்கு எதிரான ஒவ்வொரு குரல்களையும் மாற்றுக் கருத்துக்களையும் அதிகாரத்திலுள்ளவர்களுக்கு எதிராக உண்மையைப் பேசுபவர்களையும் மிகக் கொடூரமாக ஒடுக்கிக் கொண்டிருக்கிறது.*

*அதிகாலை நேரத்தில், டெல்லி போலீஸ் சிறப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கொடூரமான உபா சட்டத்தின் கீழ், நியூஸ் கிளிக்கைச் சார்ந்த பாஷா சிங், அபிஷர் சர்மா, மூத்த பத்திரிகையாளர் உர்மிலேஷ், ஆசிரியர் பிரபிர் பர்கயாஷ்தா, எழுத்தாளர் கீதா ஹரிஹரன், அரசியல் விமர்சகர் அனிந்தியோ சக்ரவர்த்தி, வரலாற்று அறிஞர் சோகைல் ஹஸ்மி, பகடி எழுத்தாளர் சஞ்சை ரசோரா உள்ளிட்ட பல்வேறு மூத்த பத்திரிகையாளர்கள் வீடுகளுக்குச் சென்று சோதனை நடத்தியிருக்கிறது. சமூக செயற்பாட்டாளர் டீஸ்டா செதல்வத் மற்றும் பத்திரிகையாளர் பரஞ்சய் குஹா தாக்குர்தா ஆகியோர் வீடுகளிலும் சோதனை நடத்தியுள்ளார்கள்.*

*சில வாரங்களுக்கு முன்பு மஹாராஷ்டிரா மாநில பாஜக தலைவர் சந்திரசேகர் பவன்குலே, பாஜக எதிர்ப்புச் செய்திகளை வெளியிடும் பத்திரிகையாளர்களுக்கு வன்முறையைத் தூண்டும் வகையில் மறைமுகமாக மிரட்டல் விட்ட பின்னணியில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளது.*

*மோடி அரசு, நாட்டில் மக்களுக்கு ஆதரவான, ஜனநாயகத்திற்கான குரல்களை நெரிப்பதற்காக உபா சட்டத்தைப் பயன்படுத்துகிறது. குடியுரிமைச் செயற்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரை மிரட்டவும் நசுக்கவும் உபா சட்டத்தைப் பயன்படுத்துகிறது. பாஜக அரசும் நாடாளுமன்றத்தில் பாஜக நாடாளுமன்ற உறுப்பினரும் நியூஸ் கிளிக்கிற்கு எதிராக கொளுத்திப் போட்டதைத் தொடர்ந்து இந்த சோதனை படலம் நடந்துள்ளது.*

*அடிமை ஊடகங்கள் கார்ப்பரேட்டுகளுக்கும் அரசாங்கத்திற்கும் லாலி பாடிக் கொண்டிருந்தபோது, நியூஸ் கிளிக் போன்ற சுதந்திர ஊடகங்கள், வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டம், சாகின்பாக் போராட்டம், தொழிலாளர் வர்க்கப் போராட்டம் போன்ற மக்கள் இயக்கங்கள், போராட்டங்கள் பற்றி செய்திகளை வெளியிடுவதில் முன்னணியில் இருந்து வருகின்றன. நாடு முழுவதும் பாஜக ஆட்சிக்கு எதிராக அதிருப்திகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், உண்மையை, மக்கள் குரல்களை முடக்கவுமே ஊடக நிறுவனங்கள் மீது இதுபோன்ற சோதனைகள் நடத்தப்படுகின்றன.*

*பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது பரந்த அளவில் நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல்களை நமது நாடு வரலாற்றில் இதுவரை கண்டதில்லை. கொடூர பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை வைத்துக் கொண்டு ஊடகங்களையும் ஜனநாயகக் குரல்களையும் மிரட்டும் அச்சுறுத்தும் செயல் தந்திரத்தினைக் கையாண்ட காலனிய ஆட்சியை, மோடி-பாஜக ஆட்சியும் பிரதிபலிக்கிறது.*

*ஜனநாயகத்திற்கு அடித்தளமான பத்திரிகை சுதந்திரத்தை அழிக்காமல் விடமாட்டோம் என்று இந்த ஆட்சி இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கு விசுவாசமான, சலுகைகளை அனுபவிக்கும் கார்ப்பரேட்டுகள்தான், பெரும்பாலான ஊடகங்களை, குறிப்பாக தொலைக் காட்சி அலைவரிசைகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார்கள். அதன் மூலம் இயல்பாகவே மோடி அரசும் ஆர்எஸ்எஸ்ஸூம் அவற்றை தங்கள் 'அடிமை ஊடகங்களாக' மாற்றிக் கொண்டுள்ளார்கள். இன்று வெறுப்பை விதைப்பவர்கள், பொய்ச் செய்தியைப் பரப்புபவர்கள் பத்திரிகையாளர்கள் முகமூடியை அணிந்து கொண்டு மோடி அரசின் பேராதரவுடன் சுதந்திரமாகத் திரிகிறார்கள். அதேவேளை, உண்மையாக தங்கள் வேலையைச் செய்யும் பத்திரிகையாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். கொலை கூட செய்யப்படுகிறார்கள்.*

*நியூஸ் கிளிக் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு முழு ஒருமைப்பாட்டைத் தெரிவித்து இகக(மாலெ) அவர்களுடன் நிற்கிறது. நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை வேகமாகப் பறிக்கும் வகையில், நடந்து கொண்டிருக்கும் சோதனைகள், நாட்டில் ஜனநாயகத்தை விரும்பும் மக்களுக்கு ஒரு எச்சரிக்கை மணியாகும். மோடி-பாஜக ஆட்சியின் பாசிசம் முன்னேறிச் செல்வது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.*

**- மத்தியக் கமிட்டி, இகக(மாலெ) விடுதலை**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.10.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# செப்.28 - பகத்சிங் பிறந்த நாள் உறுதியேற்பு
















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh